**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.161/2019**

**PW10**

**மரு. ஸ்ரீவத்சா த.பெ.சங்கர்**

A1 to 3 present.

**முதல் விசாரணையின் தொடர்ச்சி**

18.06.2017 அன்று காலை 10.35 மணியளவில் சிகிச்சைக்கு ராஜம்மாள் க.பெ. சின்னத்தம்பி என்பவரை அவரது பேரன் சத்தியராஜ் அழைத்து வந்தார். அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடனும் ,சுதாரிப்புடனும் இருந்தார். அன்று காலை 8.00 மணியளவில் அடையாளம் தெரிந்த 2 ஆண் நபர்களால் மரக்குச்சியால் அவரது வயலில் தாக்கப்பட்டதாக கூறினார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. 10x2x1 செ.மீ அளவிலான செந்நிற கிழிந்த காயம் வலது பக்க மண்டை ஓட்டின் வெளிப்புறத்தில் காணப்பட்டது.

அவருக்கு முதலுதவி அளித்து விபத்து பதிவேடு எண். 2516573 பதிவு செய்து உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேட்டின் சான்று நகல் **அ.த.சா.ஆ.6**. ( சான்று ஆவணம் எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது) , பின்னர் அவர் இறந்துவிட்டதாக ஆவணங்களில் இருந்து தெரிந்துகொண்டேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்று நினைவில் இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இரண்டு நபர்களுக்கும் ஏற்பட்ட காயம் செந்நிற காயம் என்று நான் வழங்கிய விபத்து பதிவேட்டு நகலில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டுள்ளேன். 'BR' என்று நான் குறிப்பிட்டுள்ளது செந்நிறக்காயம் என்பதை குறிக்கும். 'BR' என்றால் ஆங்கிலத்தில் Bright Red ஆகும். ராஜம்மாளை நான் பரிசோதித்து சிகிச்சை அளித்தபோது அவர் நிலைமை மோசமாக இல்லை என்றால் சரிதான். சத்தியராஜ், அவருக்கு ஏற்பட்ட காயம் அதே தினம் 9.00 மணிக்கு ஏற்பட்டதாக சொன்னார். ராஜம்மாள் , அவருக்கு ஏற்பட்ட காயம் அதே தினம் 8.00 மணிக்கு ஏற்பட்டதாக சொன்னார். பொதுவாக ஒரு நபருக்கு காயம் ஏற்பட்டால் ரத்தக்கசிவு 15 நிமிடத்தில் இருந்து 30 நிமிடத்தில் நின்று விடும் என்று சொன்னால் சரியல்ல. நான் அவ்வாறு நின்றுவிடாது என்று தவறான கருத்து தெரிவிக்கிறேன் என்றால் சரியல்ல. ராஜம்மாள் மற்றும் சத்தியராஜிற்கு ஏற்பட்ட காயங்கள் ஒரு நபர் பள்ளமான இடத்தில் குவிக்கப்பட்ட கற்கள் மீது விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரியல்ல. ஒரு நபர் மரக்கிளையில் திடீரென மோதிக்கொண்டால் மேற்கூறிய காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் வாய்ப்பு உண்டு. சத்தியராஜ் தன்னை தெரிந்த ஒரு நபர் தாக்கியதாகவும், ராஜம்மாள் தன்னை தெரிந்த இரண்டு ஆண் நபர்கள் தாக்கியதாகவும் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். ராஜம்மாளுக்கு நான் காயச்சான்றிதழ் எதுவும் வழங்கவில்லை. ராஜம்மாள் மற்றும் சத்தியராஜ்

ஆகியோருக்கு ஏற்பட்ட காயம் என்னிடம் சிசிக்சைக்கு ஆஜரான நேரத்தில் இருந்து அரை மணி நேரத்திற்கு முன் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு என்றால் சரிதான். மேற்கண்ட காயங்கள் என்னிடம் ஆஜராவதற்கு 4 மணி நேரத்திற்குள் எப்பொழுது வேண்டுமானாலும் ஏற்பட்டிருக்கலாம்.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.